செ.வெ.எண்.326 நாள்:23.07.2021

# நீலகிரி மாவட்டத்தில், தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி (PCV) செலுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

---

நீலகிரி மாவட்டம், உதகை அரசு சேட் நினைவு மகப்பேறு மருத்துவமனையில், தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி (PCV) செலுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.07.2021) குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தற்பொழுது கொரோனா தொற்று நோயின் பாதிப்பு தமிழகத்தில் படிப்படியாக குறைந்து வருகிறது. தமிழ்நாடு அரசு குழந்தைகளுக்கு கொரோனா தொற்று நோய் மட்டுமின்றி மற்ற எந்தவொரு நோயும் பாதிக்காதவாறு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் குழந்தைகளுக்கு நியூமோகாக்கல், நிமோனியா மற்றும் மூளைக்காய்ச்சல் நோய்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி நீலகிரி மாவட்டத்தில் இன்று முதல் செலுத்தப்படுகிறது. இத்தடுப்பூசி குழந்தைகளுக்கு 6-வது வாரம் (1½ மாதம்), 14-வது வாரம் (3½மாதம்) மற்றும் 9-வது மாதத்தில் மூன்று தவணைகளாக செலுத்தப்படும். நமது மாவட்டத்தில் பிறந்து 6 வாரங்கள் ஆன மொத்தம் 167 குழந்தைகளுக்கு முதல் தவணை நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி (PCV) அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அனைத்து குழந்தைகளுக்கும் கால அட்டவணைப்படி இத்தடுப்பூசியானது அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலம் செலுத்தப்படும். இந்த நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசியானது முற்றிலும் பாதுகாப்பானது. எனவே தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்கு இந்த நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசியினை (PCV) தவறாமல் செலுத்தி கொள்ள வேண்டும்.

மேலும், குழந்தைகளுக்கு இலேசான சளி மற்றும் இருமல் இருப்பினும் இத்தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். ஆகவே, பிறந்த 6 வாரங்கள் ஆன அனைத்து குழந்தைகளுக்கும் விடுபடாமல் நியூமோகாக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி (PCV) செலுத்துவதன் மூலம் நிமோனியா மற்றும் மூளைக்காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாத்து கொள்ளலாம். தமிழ்நாடு அரசு கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் கொரோனா தொற்று நோயிலிருந்து பாதுகாத்து கொள்ள கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தி உள்ளது. கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தி கொள்வதன் மூலம் எந்தவொரு பாதிப்பும் இல்லை. எனவே அனைத்து கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொள்ள தாமாக முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பாலுசாமி, துணை இயக்குநர் (குடும்பநலம்) உதகை அரசு மருத்துவமனை மரு.இரியன் ரவிக்குமார், உதகை அரசு மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை தலைவர் மரு.தியாகராஜன், உதகை வட்டார மருத்துவ அலுவலர் மரு.முருகேசன், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.